



# "கூட்டுறவின் மூலம் வளமை"

## <u>இந்திய கூட்டுறவு அமைச்சகத்தின் முக்கிய முன் முயற்சிகள்</u>

**(6th ஜூலை 2021 - 14th ஜூன் 2023)**

## (I) தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்துதல்

### 1. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களாக மேம்படுத்துவதற்கான துணை விதிகள்

தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கான மாதிரி துணை விதிகள் தயாரிக்கப்பட்டு அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள், தேசிய கூட்டமைப்புகள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் கூட்டுறவு அமைச்சகத்தால் 05 ஜனவரி 2023 அன்று வெளியிடப்பட்டது. இச்சங்கங்கள் / பழங்குடியினர் பல் நோக்கு சங்கங்களின வருமான ஆதாரங்களை அதிகரிக்கும். மற்றும் பால்வளம், மீன்வளம், சேமிப்பு போன்ற 25 க்கும் மேற்பட்ட புதிய துறைகளில் புதிய

வேலை வாய்ப்புகளை உருவாக்கும். இதுவரை, 23 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களால் ஏற்று கொள்ளப்படடு, பிற மாநிலங்களில் ஏற்றுக் கொள்ளத்தக்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2. கணினி மயமாக்கலின் மூலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்துதல்**

மொத்தம் 63,000 செயல்பாட்டில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் / / பழங்குடியினர் பல் நோக்கு சங்கங்கள் ஆகியன நபார்டு வங்கியுடன் ஒரே தேசிய மென்பொருள் நெட்வொர்க் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இதுவரை, 24 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களிலிருந்து மொத்தம் 58,383 சங்கங்களை கணினிமயமாக்குவதற்கான முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளன. இதற்காக, வன்பொருள் கொள்முதல், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் ஆதரவு அமைப்புகளை அமைப்பதற்காக மாநிலங்களுக்கு மொத்தம் ரூ.437.17 கோடியை மத்திய அரசு விடுவித்துள்ளது. தேசிய ஒருங்கிணைந்த மென்பொருள் நபார்டு வங்கியால் தயாரிக்கப்பட்டுள்ளது. வன்பொருள் கொள்முதல் மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளரை இறுதி செய்த பிறகு கணினிமயமாக்கல் தொடங்கும். இந்த முன்முயற்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கும்.

**3. ஒவ்வொரு ஊராட்சி / கிராமத்திலும் பல்நோக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் / பால்பண்ணை / மீன்வள கூட்டுறவு சங்கங்கள் (2 லட்சம் புதிய சங்கங்கள்) நிறுவுதல்**

பிப்ரவரி 15, 2023 அன்று அமைச்சரவை ஒப்புதல் அளித்த இந்த திட்டம், அடுத்த 5 ஆண்டுகளில் இதுவரை கூட்டுறவு சங்கங்கள் இல்லாத ஊராட்சிகள் / கிராமங்களில் 2 லட்சம் புதிய பல்நோக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் / பால் / மீன்வள கூட்டுறவு சங்கங்களை அமைக்க இலக்கு நிர்ணயித்துள்ளது. இதன் கீழ், மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் தொடக்கக் கூட்டுறவு சங்கங்கள் அளவில் ஒருங்கிணைக்கப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த அமைச்சகங்களுக்கு இடையேயான குழு, தேசிய அளவிலான

ஒருங்கிணைப்புக் குழு, மாநில அளவிலான கூட்டுறவு வளர்ச்சிக் குழுக்கள் மற்றும் மாவட்ட அளவிலான கூட்டுறவு வளர்ச்சிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அமைச்சகம் அனைத்து மாநிலங்களுடன் கலந்தாலோசனைகளை நடத்தி வருகிறது. நபார்டு வங்கி, தேசிய பால் வள வளர்ச்சி வாரியம் மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் ஆகியவற்றால் புதிய சங்கங்கள் அமைப்பது தொடர்பான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கான பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.

**4. கூட்டுறவுத் துறையில் உலகின் மிகப்பெரிய பரவலாக்கப்பட்ட தானிய சேமிப்புத் திட்டம்** மூலம் **உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்**

மே 31, 2023 அன்று மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த இந்த திட்டத்தின் கீழ், சேமிப்பு கிடங்குள், சுங்க வாடகை மையங்கள், பதப்படுத்தும் அலகுகள், நியாய விலை கடைகள் போன்ற பல்வேறு வகையான விவசாய உள்கட்டமைப்புகள் உள்ளன. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் அளவில் மத்திய அரசின் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் இந்த திட்டம் உருவாக்கப்படும். நாட்டின் உணவுப் பாதுகாப்பை இந்த திட்டம் உறுதி செய்யும், மேலும் உணவு தானியங்கள் வீணாவதைக் குறைக்கும், விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சிறந்த விலையை ஏற்படுத்தும் மற்றும் பல்வேறு விவசாயத் தேவைகளை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள மட்டத்திலேயே பூர்த்தி செய்யும். மாநிலங்களின் ஒத்துழைப்போடு இதன் மாதிரி முனைவு திட்டம செயல்படுத்தப்பட்டு வருகிறது. அமைச்சகங்களுக்கு இடையேயான குழு, தேசிய அளவிலான ஒருங்கிணைப்புக் குழு, மாநில அளவிலான கூட்டுறவு வளர்ச்சிக் குழு மற்றும் மாவட்ட அளவிலான கூட்டுறவு வளர்ச்சிக் குழு ஆகியவை இத்திட்டத்தை ஒருங்கிணைக்கும்.

**5. இ-சேவைகளை சிறப்பாக அணுகுவதற்காக பொது சேவை மையங்களாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள.**

02.02.2023 அன்று கூட்டுறவு அமைச்சகம், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், நபார்டு மற்றும் சி.எஸ்.சி மின் ஆளுமை சேவைகள் இந்தியா லிமிடெட் ஆகியவற்றுக்கு இடையே தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் இ-சேவைகளை சேவைகளை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இன்று வரை 15,000 க்கும் மேற்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் இ-சேவை மையங்களாக இணைக்கபட்டுள்ள. மின் ஆளுமை சேவைகள் இந்தியா லிமிடெட் மற்றும் நபார்டு வங்கி மூலம் இ-சேவை இணைக்கப்பட்டுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**6. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள மூலம் புதிய உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்குதல்**

கூட்டுறவுத் துறையில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் (என்.சி.டி.சி.) கீழ், கூடுதலாக 1100 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்போது, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களும் விவசாயம் தொடர்பான பிற பொருளாதார நடவடிக்கைகளை எ.ஃப்.பி.ஓக்களாக செய்ய முடியும். கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு அவர்களின் விளைபொருட்களுக்கு நியாயமான மற்றும் லாபகரமான விலையைப் பெறுவதற்குத் தேவையான சந்தை இணைப்பை வழங்குவதற்கும் இந்த முயற்சி உதவியாக இருக்கும்.

**7. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் எல்பிஜி விநியோகஸ்தருக்கான தகுதி**

பெட்ரோலிய அமைச்சகம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் எல்பிஜி விநியோகத்திற்கு தகுதியுடையதாக மாற்ற விதிகளை திருத்துகிறது, அதன் பிறகு இவைகள் எல்பிஜியை விநியோகிக்க முடியும். இது இச்சங்கங்களின் பொருளாதார நடவடிக்கைகளை அதிகரிக்கவும், கிராமப்புறங்களில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

## 8. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களால இயக்கப்படும் பெட்ரோல் மொத்த விற்பனை நிலையங்கள் சில்லறை விற்பனை கடைகளாக மாற்ற அனுமதி

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் தற்போதுள்ள மொத்த நுகர்வோர் உரிமம் பெற்ற தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை சில்லறை விற்பனை நிலையங்களாக மாற்ற ஒப்புக் கொண்டுள்ளது. புதிய பெட்ரோல் விநியோகஸ்தர்களாக்கான முன்னுரிமை அளிக்கப்படும். இந்த ஏற்பாடுகள் இச்சங்கங்களின் இலாபம் அதிகரிக்கும் மற்றும் கிராமப்புறங்களில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

## 9. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம கிராமப்புற அளவில் ஜெனரிக் மருந்துகள் கிடைக்கும் வசதி ஏற்படுத்தல்

மாண்புமிகு மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் தலைமையில் மாண்புமிகு இரசாயனங்கள் மற்றும் உரத்துறை அமைச்சருடன் ஜூன் 06, 2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில், 2023 ஆகஸ்ட் மாதத்திற்குள் 1,000 ஜன் அவுஷதி மையங்களையும், 2023 டிசம்பருக்குள் 2,000 ஜன் அவுஷதி மையங்களையும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் திறக்க முடிவு செய்யப்பட்டது. இந்த முயற்சியின் மூலம், மலிவு விலையில் ஜெனரிக் மருந்துகள் சாமானிய மக்களுக்கு கிடைக்கும். கிராம / வட்டார அளவிலான கூடுதல் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும். ஆர்வமுள்ள சங்கங்களை கண்டறிந்து, ஆன்லைனில் விண்ணப்பிக்க, மாநில அரசால் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**10. உர விநியோக மையங்களாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள**

மாண்புமிகு உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் தலைமையில் மாண்புமிகு இரசாயனத் துறை அமைச்சருடன் ஜூன் 06, 2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில், செயல்பாட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை உர சில்லறைவிற்பனையாளர்கள், பிரதம மந்திரி விவசாயிகள் வளர்ச்சி மையங்கள (பி.எம்.கே.எஸ்.கே) மற்றும் ட்ரோன் மூலம் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைத் தெளிப்பதற்கான தொழில்முனைவோராக செயல்பட தகுதி பெறச் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ட்ரோன்களை சொத்து கணக்கெடுப்புக்கும் பயன்படுத்தலாம். இந்த நடவடிக்கை இச்சங்கங்கள் மட்டத்தில் விவசாயிகளுக்கு உரங்கள் கிடைப்பதை உறுதி செய்வதோடு, புதிய வணிக வாய்ப்புகளை உருவாக்கும்.

**11. PM-KUSUM திட்டத்தை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் அளவில் நடைமுறைப்படுத்துதல்**

13 கோடி விவசாய உறுப்பினர்களுடன் நேரடித் தொடர்பைக் கொண்டுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின கட்டமைப்பு மற்றும் தொடர்பு வசதிகளை பயன்படுத்தி, ஊராட்சி அளவில் பரவலாக்கப்பட்ட சூரிய மின்சக்தி நிலையங்களை அமைக்க முடியும். இதன் மூலம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் உடன் இணைக்கப்பட்ட விவசாயிகள் விவசாய டீசல் பம்புகளுக்கு பதிலாக சூரிய விவசாய நீர் பம்புகளை பயன்படுத்தலாம். மற்றும் தங்கள் நிலத்தின் விளிம்பில் ஒளிமின்னழுத்த தொகுதிகளை நிறுவுவதன் மூலம் அவர்களின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்யலாம், இதன் மூலம் திட்டத்தின் வரம்பை கடைசி மைல் வரை நீட்டிக்க முடியும். மேலும், இச்சங்கங்கள் மற்றும் அதன் உறுப்பினர் விவசாயிகளுக்கு மாற்று வருமான ஆதாரங்கள் கிடைக்கும். கூட்டுறவு அமைச்சினால் இது குறித்த ஒரு கருத்து குறிப்பு தயாரிக்கப்பட்டு அதிகாரிகள் அளவில் கூட்டுறவு அமைச்சக செயலாளர் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் இடையே பேச்சு வார்த்தை நடைபெற்றுள்ளது.

## (II) கூட்டுறவுச் சங்கங்களுக்கான வருமான வரிச் சட்டத்தில் நிவாரணம்

### 12. கூட்டுறவு சங்கங்களுக்கான வருமான வரி மீதான கூடுதல் வரி குறைப்பு

ரூ.1 கோடி முதல் ரூ.10 கோடி வரை இலாபம் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கான வருமான வரி மீதான கூடுதல் வரி 12 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் மீதான வருமான வரிச் சுமை குறைவதுடன், உறுப்பினர்களின் நலனுக்காகச் செயல்பட சங்கங்களுக்கு அதிக மூலதனம் கிடைக்கும்.

### 13. கூட்டுறவுச் சங்கங்கள் மீதான குறைந்தபட்ச மாற்று வரி குறைப்பு

கூட்டுறவு சங்கங்களுக்கான குறைந்தபட்ச மாற்று வரி விகிதம் 18.5 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த விதியின் மூலம், தற்போது கூட்டுறவு சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையே இந்த விஷயத்தில் சமநிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் கூட்டுறவு சங்கங்கள் வலுப்பெறுவதுடன், கூட்டுறவுத் துறை விரிவடையும்.

### 14. தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கிகள் ரொக்க வைப்பு மற்றும் ரொக்கக் கடன்களின் வரம்பு அதிகரிப்பு

தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள **மற்றும்** தொடக்க வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கிகளின் ரொக்க வைப்பு மற்றும் ரொக்கக் கடன்களுக்கான வரம்பு ரூ.20 ஆயிரத்தில் இருந்து ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடு அவர்களின் நடவடிக்கைகளை எளிதாகும், அவர்களின் வணிகத்தை அதிகரிக்கும் மற்றும் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு பயனளிக்கும்.

### 15. புதிய உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வரி குறைப்பு

மார்ச் 31, 2024 க்குள் உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடங்கும் புதிய உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தற்போதுள்ள 30% வரி

ஒத்துமொத்த 15% வரி விதிக்கப்படும். இந்த விதியின் மூலம், தற்போது கூட்டுறவு சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையே இந்த விஷயத்தில் சமநிலை ஏற்பட்டுள்ளது. இது உற்பத்தித் துறையில் புதிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவதை ஊக்குவிக்கும்.

## 16. TDS வரம்பு உயர்வு

2023-24 ஆம் ஆண்டிற்கான மத்திய வரவு-செலவுத் திட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களில் வரி பிடித்தம் செய்யாமல் பணம் எடுக்கும் வரம்பு ஆண்டுக்கு ரூ.1 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது அவர்கள் தங்கள் உறுப்பினர்களின் நலனுக்காக வேலை செய்ய பயன்படுத்த முடியும்.

## 17. வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 269 எஸ்.டி இன் கீழ் ரொக்க பரிவர்த்தனைகளில் நிவாரணம்

கூட்டுறவு சங்கங்கள் முன்பு தங்கள் விநியோகஸ்தர்களுடனான 'ஒப்பந்தத்தை' “ஓரே நிகழ்வாக' கருதின, மேலும் ஆண்டு முழுவதும் அந்த விநியோகஸ்தருடனான அனைத்து பரிவர்த்தனைகளிலும், ரொக்க ரசீது இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் இருந்தால், அது வரிக்குரியதாகக் கருதப்பட்டு வருமான வரி அபராதம் விதிக்கப்பட்டது. இனி கூட்டுறவு சங்கங்கள் தங்கள் விநியோகஸ்தர்களுடன் செய்யும் 'ஒப்பந்தம்' ஓரே நிகழ்வாக கருதப்படாது என்று வருமான வரித்துறை சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. இந்த விளக்கத்தின் மூலம், கூட்டுறவு சங்கங்கள் தங்கள் விநியோகஸ்தருடன் செய்யும் ஒவ்வொரு ரொக்க பரிவர்த்தனையும் தனித்தனியாக பரிசீலிக்கப்படும், இதனால் அவர்களுக்கு வருமான வரி அபராதம் விதிக்கப்படாது. இதன் மூலம், மாநில மற்றும் மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்கள் வங்கி விடுமுறை நாட்களில் தங்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து ரொக்கமாக பணம் பெறுவதன் மூலம் உறுப்பினர்களுக்கு ரொக்கமாக பணம் செலுத்த முடியும்.

## (III) கூட்டுறவு வங்கிகள் எதிர்நோக்கும் இடர்பாடுகளைத் தீர்த்தல்

**18.** நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் (UCBs) இப்போது தங்கள் வணிகத்தை விரிவுபடுத்த புதிய கிளைகளைத் திறக்க முடியும்.

**19.** நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் வணிக வங்கிகளைப் போலவே நிலுவையில் உள்ள கடன்களை ஒரு தீர்வை முறையில் (OTS) தீர்க்க முடியும்.

**20.** நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்ட முன்னுரிமை துறை கடன் (PSL) இலக்குகளை அடைய கூடுதல் கால வரம்பு வழங்கப்பட்டுள்ளது.

**21.** நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து தொடர்பு கொள்வதற்காக ரிசர்வ் வங்கியில் ஒரு நோடல் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

**22.** ரிசர்வ் வங்கி நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக அவர்களின் இருப்பிட வங்கி சேவைகளை வழங்க அனுமதித்துள்ளது.

**23.** கிராமப்புற மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான தனிநபர் வீட்டுக் கடன் வரம்பை ரிசர்வ் வங்கி இரட்டிப்பாக்கியுள்ளது.

**24.** கிராமப்புற கூட்டுறவு வங்கிகள் இப்போது வணிக (ரியல் எஸ்டேட்) - குடியிருப்பு வீட்டுவசதித் துறைக்கு கடன் வழங்க முடியும், இதன் மூலம் அவற்றின் வணிகத்தை பன்முகப்படுத்த முடியும்.

**25.** CGSTMSEயின் உறுப்பினர்: கடன் வழங்கும் நிறுவனங்களாக கூட்டுறவு வங்கிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம், இப்போது உறுப்பு கூட்டுறவு வங்கிகள் வழங்கப்பட்ட கடன்களில் 85 சதவீதம் வரை ரிஸ்க் கவரேஜை பயன்படுத்திக் கொள்ள முடியும். இத்துடன், கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் இனி கூட்டுறவு வங்கிகளில் ரூ.5 கோடி வரை பிணையில்லாக் கடன் பெற முடியும்.

**26.** கூட்டுறவு வங்கிகளை நவீன ஆதார் இயக்கப்பட்ட கட்டண முறையுடன் (ஏ.இ.பி.எஸ்) இணைப்பதற்கான உரிமக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இது தவிர, கூட்டுறவு நிதி நிறுவனங்கள் உற்பத்திக்கு முந்தைய கட்டத்தின் முதல் மூன்று மாதங்களுக்கு இந்த வசதியை இலவசமாகப் பெற முடியும். இதன் மூலம், விவசாயிகள் தங்கள் கைரேகை மூலம் வீட்டிலேயே வங்கிச் சேவையைப் பெற முடியும்.

## (IV) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை புதுப்பித்தல்

### 27. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு வருமான வரி விலக்கு

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு நியாயமான மற்றும் லாபகரமான விலை அல்லது அரசு பரிந்துரைக்கும் விலை வரை கரும்பு விலையை உயர்த்தினால் கூடுதல் வருமான வரி செலுத்த வேண்டியதில்லை. இதன் மூலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தங்கள் உறுப்பினர்களுக்கு கரும்புக்கு அதிக விலை கொடுக்க முடியும், மேலும் இந்த அதிக செலவுக்கு வருமான வரி விலக்கு கிடைக்கும்.

### 28. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் வருமான வரி தொடர்பாக பல வருடங்களாக நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு

2023-24 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையின் மூலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு நிதி ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 2016-17-ம் ஆண்டின செலவினமாக கோர அனுமதிக்கப்படும். இதன் மூலம், சுமார் 10,000 கோடி ரூபாய் நிவாரணம் பெற முடியும், இதனால் பல வருடங்களாக நிலுவையில் உள்ள வருமான வரி சிக்கல்களுக்கு தீர்வு காண முடியும்.

### 29. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை வலுப்படுத்த என்.சி.டி.சி மூலம் ரூ.10,000 கோடி கடன் திட்டம்

2022-23 மற்றும் 2023-24 ஆம் நிதியாண்டுகளில் தேசிய சர்க்கரை மேம்பாட்டுக் கழகத்திற்கு மத்திய அரசு ரூ.1,000 கோடி மானியம் வழங்கும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை வலுப்படுத்துவதற்காக என்.சி.டி.சி.க்கு மானியம்' என்ற புதிய திட்டத்தை கூட்டுறவு அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு ரூ .10,000 கோடி வரை கடன்களை வழங்க என்.சி.டி.சி இந்த மானியத்தைப் பயன்படுத்தும், அவை எத்தனால் ஆலைகளை அமைப்பதற்கு அல்லது இணை மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு அல்லது செயல்பாட்டு மூலதனத்திற்கு அல்லது மேற்கண்ட மூன்று நோக்கங்களுக்கும் பயன்படுத்த முடியும்.

**30. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு எத்தனால் வாங்குவதற்கும் மற்றும் இணை மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதற்கும் முன்னுரிமை**

எத்தனால் கலப்பு திட்டத்தின் (EBP) கீழ் பெட்ரோலிய அமைச்சகத்தால் எத்தனால் கொள்முதலில் தனியார் நிறுவனங்களுக்கு இணையாக கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கருதப்படும். கரும்புச் சக்கையிலிருந்து இணை மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கும் திட்டமும் உள்ளது. இந்த நடவடிக்கைகளால், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் வணிகம் விரிவடைந்து அவற்றின் லாபமும் அதிகரிக்கும்.

## (V) தேசிய அளவில் மூன்று புதிய பல்-மாநில சங்கங்கள்

**31. ஏற்றுமதிக்கான தேசிய அளவிலான பல்-மாநில கூட்டுறவு சங்கம்**

2002ஆம் ஆண்டு பல்-மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் கூட்டுறவுத் துறையிலிருந்து ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக ஒருகினைந்த அமைப்பாக ஒரு புதிய தேசிய கூட்டுறவு ஏற்றுமதி நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. மாவட்ட, மாநில, தேசிய அளவிலான இணையங்கள் மற்றும் பல மாநில கூட்டுறவு சங்கங்கள் உட்பட தொடக்க நிலை முதல் தேசிய அளவிலான கூட்டுறவு சங்கங்கள் வரை இதன் உறுப்பினர்களாகலாம். இச்சங்கத்தின் மூலம் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிக்கு வழிவகை செய்யப்பட்டு விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை பெறமுடியும்.

**32. விதைகளுக்கான சான்றளிக்கப்பட்ட தேசிய அளவிலான பல மாநில கூட்டுறவு சங்கம்**

பல மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 2002ன் கீழ், மேம்படுத்தப்பட்ட விதைகளை ஒரே பிராண்ட் பெயரில் பயிரிடுதல், உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகிப்பதற்காக ஒருங்கினைந்த அமைப்பாக புதிய பாரதிய பீஜ் சஹாகாரி சமிதி லிமிடெட் நிறுவப்பட்டுள்ளது. மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் கூட்டுறவு சங்கங்கள் (தொடக்க, மாவட்ட, மாநில அளவில்) அதன் உறுப்பினர்களாகலாம். இச்சங்கம் விவசாயிகளுக்கு மேம்பட்ட விதைகள் கிடைப்பதை அதிகரித்து, பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும்.

### 33. இயற்கை வேளாண்மைக்கான புதிய தேசிய அளவிலான பல மாநில கூட்டுறவு சங்கம்

2002 ஆம் ஆண்டு பல மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ், சான்றளிக்கப்பட்ட மற்றும் உண்மையான கரிமப் பொருட்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தலுக்காக செயல்படும் ஒரு குடை அமைப்பாக தேசிய கூட்டுறவு ஆர்கானிக்ஸ் லிமிடெட் நிறுவப்பட்டுள்ளது. மாவட்ட, மாநில, தேசிய அளவிலான கூட்டமைப்புகள், பல மாநில கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உள்ளிட்ட முதன்மை முதல் தேசிய அளவிலான கூட்டுறவு சங்கங்கள் இதன் உறுப்பினர்களாகலாம். இதனால், இயற்கை பொருட்களின் உற்பத்தி அதிகரித்து, விவசாயிகளின் லாபம் அதிகரிக்கும்.

## (VI) கூட்டுறவுத் துறையில் கல்வி மற்றும் பயிற்சி

### 34. உலகின் மிகப்பெரிய கூட்டுறவு பல்கலைக்கழகம் நிறுவுதல்

கூட்டுறவுக்கான தேசிய கூட்டுறவு பல்கலைக்கழகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவு கல்வி, கூட்டுறவு பயிற்சி, கூட்டுறவு ஆலோசனை, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகிய பணிகளுக்காக இப்பல்கலைக்கழகம் நிலையான, போதுமான மற்றும் தரமான பயிற்சி பெற்ற மனிதவளத்தை வழங்குவதை உறுதி செய்வதோடு, தற்போதுள்ள கூட்டுறவு பணியாளர்களின் திறன் மேம்பாட்டிற்காகவும் செயல்படும். இப்பல்கலைக்கழகம் கூட்டுறவுத் துறையில் சிறப்பு வாய்ந்த பல்கலைக்கழகமாகத் திகழும்.

### 35. கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சிக்கான புதிய திட்டம்

கூட்டுறவு சங்கங்களை வலுவான பொருளாதார நிறுவனமாக மாற்றவும், கூட்டுறவு இயக்கத்தை விரிவுபடுத்தவும், வலுப்படுத்தவும், VAMNICOM, தேசிய கூட்டுறவு பயிற்சிக்கழகம் (NCCT) மற்றும் JCTC ஆகியவற்றின் ஆசிரியர்களின் திறனை மேம்படுத்தவும் மற்றும கூட்டுறவு சங்கங்களின் முக்கிய விசயங்களில தரமான ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை ஊக்குவிக்கவும் இத்திட்டம் முகிகயத்துவம் பெறுகிறது. இது தொடர்பாக, ஆரம்ப கட்ட ஆலோசனை நடத்தப்பட்டு, அடுத்த மூன்று மாதங்களில் திட்டம் வகுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 36. NCCT மூலம் பயிற்சி மற்றும் விழிப்புணர்வை ஊக்குவித்தல்

கூட்டுறவு அமைச்சகத்தின் கீழ் உள்ள தன்னாட்சி அமைப்பான தேசிய கூட்டுறவு பயிற்சி கவுன்சில் (NCCT) மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் கூட்டுறவுத் துறைகளைச் சேர்ந்த பணியாளர்கள் உட்பட நாடு முழுவதும் உள்ள கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் வாரிய உறுப்பினர்களுக்கு கூட்டுறவு கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களை நடைமுறை படுத்துகிறது. இது நாடு முழுவதும் பரவியுள்ள அதன் 20 உறுப்பு பயிற்சி நிறுவனங்கள் மூலம் இந்த திட்டங்களை நடத்துகிறது, அவற்றில் VAMNICOM (வைகுந்த் மேத்தா தேசிய கூட்டுறவு மேலாண்மை நிறுவனம்) ஒரு தேசிய அளவிலான நிறுவனமாகும். மேலும், 14 மாநில அளவிலான மற்றும் ஐந்து மண்டல அளவிலான நிறுவனங்கள் உள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் கூட்டுறவு பங்கேற்பாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கான 1740 பயிற்சித் திட்டங்களை இலக்காகக் கொண்ட NCCT 3287 பயிற்சி திட்டங்களை நடத்தியது. கூடுதலாக, இந்த காலகட்டத்தில், கவுன்சில் சுமார் 2,01,507 பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி அளித்தது, இது திட்டமிடப்பட்ட 43,500 பங்கேற்பாளர்களை விட ஐந்து மடங்கு அதிகமாகும். கூட்டுறவுச் சங்கங்களுக்கான உள்ளூர் மொழிகளில் தொழில் மேம்பாட்டுத் திட்டங்கள் (தற்போதுள்ள விரிவான திட்ட அறிக்கைகளின அடிப்படையில்) என்.சி.சி.டி மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

## (VII) புதிய தேசிய வுட்டுறவுக்கொள்கை மற்றும் தேசிய கூட்டுறவு தரவு தளம்

### 37. புதிய தேசிய கூட்டறவு கொள்கை உருவாக்கம்

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சுரேஷ் பிரபு தலைமையில் பல்வேறு மாநிலங்கள் மற்றும் நாடு முழுவதிலுமிருந்து வல்லுநர்கள் மற்றும் 49 உறுப்பினர்களைக் கொண்ட பல்துறை மற்றும் தேசிய அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை, நிபுணர் குழுவின் 9 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன, இதன் போது பங்குதாரர்களுடன் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன, மேலும் புதிய தேசிய கூட்டுறவு கொள்கை விரைவில் தயாராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**38. புதிய தேசிய கூட்டுறவு தரவுத்தளம்**

விரிவான, உண்மையான மற்றும் புதுப்பிக்கப்பட்ட தேசிய கூட்டுறவு தரவுத்தளத்தை உருவாக்குவதற்கான பணிகள் மாநில அரசுகளின் உதவியுடன் கூட்டுறவு அமைச்சகத்தால் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், பால்வளம் மற்றும் மீன்வளத் துறையைச் சேர்ந்த, 2.64 லட்சம் சங்கங்களை வரைபடமாக்கும் பணி, 2023, பிப்., 28ல் நிறைவடைந்தது. இரண்டாம் கட்டமாக, தேசிய கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளின் வரைபடம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூன்றாம் கட்டத்தின் கீழ், மற்ற அனைத்துத் துறைகளைச் சேர்ந்த சுமார் 5.8 லட்சம் கூட்டுறவு சங்கங்கள் தரவுத்தளத்தில் சேர்க்கப்படுகின்றன, இது 2023 ஜூன் மாதத்திற்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## (VIII) கூட்டுறவு சங்கங்களை GEM போர்ட்டலில் வாங்குபவராக' சேர்த்தல்

**39.** கூட்டுறவு சங்கங்களை கீழ்க்கண்டவாறு பதிவு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

1 ஜூன், 2022 முதல் கூட்டுறவு சங்கங்கள் அரசாங்க மின்-சந்தையில் (GEM) "வாங்குபவராக" (Buyer) அங்கிகரிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சங்கங்கள் இப்போது நாடு முழுவதும் உள்ள சுமார் 60 லட்சம் உண்மையான விற்பனையாளர்கள் / சேவை வழங்குநர்களிடமிருந்து GEM இன் ஒற்றை தளத்தில் வாங்க முடியும். இதுவரை 550-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் GEM போர்ட்டலில் வாங்குபவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், கூட்டுறவு சங்கங்கள் GEM மில் விற்பனையாளர்களாக பதிவு செய்ய ஊக்குவிக்கப்படுகின்றன.

## (IX) தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தை விரிவுபடுத்துதல்

**40.** சுய உதவிக் குழுக்களுக்கான 'ஸ்வயம்சக்தி சஹாகர்' , நீண்ட கால விவசாயக் கடனுக்கான 'திர்கவதி கிருஷக் சஹாகர்'; பால்பண்ணைக்கு 'டெய்ரி சஹாகர்', மகளிர் கூட்டுறவு நிறுவனங்களுக்கு 'நந்தினி சகாகர் போன்ற பல்வேறு துறைகளில் கூட்டுறவு சங்கங்களுக்கான புதிய திட்டங்கள் என்.சி.டி.சியால் தொடங்கப்பட்டுள்ளன; 2022-23 நிதியாண்டில், என்.சி.டி.சி ரூ.41,025 கோடி (தற்காலிக) நிதி உதவியை வழங்கியுள்ளது,

இது 2021-22 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூ.34,221 கோடியை விட கிட்டத்தட்ட 20% அதிகமாகும். கூட்டுறவுத் துறைக்கு மிகவும் தேவையான நிதியின் ஓட்டத்தை அதிகரிக்க, என்.சி.டி.சி அதன் செயல்திறன் மற்றும் புவியியல் பரவலை அதிகரிப்பதன் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் கடன் வழங்கல்களை ஆண்டுக்கு சுமார் ரூ .3 லட்சம் கோடியாக அதிகரிக்க திட்டமிட்டுள்ளது. அனைத்து மாநிலங்கள் மற்றும் மாநில கூட்டுறவு சங்கங்கள் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் கடன் திட்டங்களைப் பெறலாம்.

## (X) மத்திய பதிவாளர் அலுவலகத்தை வலுப்படுத்துதல்

### 41. மத்திய பதிவாளர் அலுவலகத்தை கணினி மயமாக்குதல்

2002 ஆம் ஆண்டின் பல மாநில கூட்டுறவு சங்கங்கள் (MSCS) சட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பு மத்திய பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளது. பல மாநில கூட்டுறவு சங்கங்களுக்கு டிஜிட்டல் சூழலை உருவாக்கும் வகையில் மத்திய பதிவாளர் அலுவலகம் கணினி மயமாக்கப்பட்டு வருகிறது. மத்திய பதிவாளர் அலுவலகத்தில் மின்னணு பணி ஓட்டம் மூலம் விண்ணப்பங்கள் மற்றும் சேவை கோரிக்கைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் செயலாக்க இந்த மென்பொருள் உதவும். ஓடிபி அடிப்படையிலான பயனர் பதிவு, MSCS சட்டம் மற்றும் விதிகளுக்கு இணங்குவதற்கான சரிபார்ப்பு, வி.சி மூலம் விசாரணை, பதிவு சான்றிதழ் வழங்குதல் மற்றும் பிற தகவல்தொடர்புகளுக்கான ஏற்பாடுகள் இதில் இருக்கும். இந்த கணினிமயமாக்கல் திட்டம் புதிய MSCS பதிவு செய்ய கணிசமாக உதவும், மேலும் அவர்கள் வணிகம் செய்வதை எளிதாக்கும்.

### 42. பல மாநில கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) மசோதா, 2022

பல மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 2002, அரசியல் அமைப்பு சட்டம் 97ன் விதிகளை உள்ளடக்கியது. பல மாநில கூட்டுறவு சங்கங்களில் இந்த அரசியலமைப்பு திருத்தம் நிர்வாகத்தை வலுப்படுத்துதல், வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல், பொறுப்புணர்வை அதிகரித்தல், தேர்தல் செயல்முறையை மேம்படுத்துதல் போன்ற சீர்திருத்தங்களை கொண்டுவரும். இந்த மசோதா மக்களவையில் டிசம்பர் 7, 2022 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு, டிசம்பர் 20, 2022 அன்று இரு அவைகளின் நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. 22.03.2023 அன்று

மக்களவையில் கூட்டுக் குழுவின் அறிக்கையின்படி, இந்த மசோதா பரிசீலனை மற்றும் நிறைவேற்றுவதற்கான அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. வரும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் இந்த மசோதா பரிசீலனைக்கு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட உள்ளது.

## (XI) பிற முயற்சிகள்

### 43. வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை கணினி மயமாக்குதல்

நீண்டகால கூட்டுறவு கடன் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை கணினிமயமாக்கும் திட்டத்தை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. இது வன்பொருள் கொள்முதல், விரிவான நிறுவன வள திட்டமிடல் (ERP) தீர்வுகள், டிஜிட்டல்மயமாக்கல், பயிற்சி மற்றும் ஆதரவை வழங்குதல் மற்றும் மென்பொருள் பராமரிப்பு போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்டிருக்கும். இத்திட்டத்திற்கான செலவினத்தில் 25 சதவீதத்தை இவ்வங்கிகளும மீதமுள்ள 75 சதவீதத்தை மத்திய மற்றும் மாநில அரசுகளும் ஏற்கும். அதிகரித்த செயல்திறன், விரைவான கடன் வழங்கல், குறைக்கப்பட்ட பரிவர்த்தனை செலவுகள், அதிகரித்த வெளிப்படைத்தன்மை மற்றும் கொடுப்பனவுகளின் குறைந்த ஏற்றத்தாழ்வுகள் போன்ற பல்வேறு நன்மைகளை இவ்வங்கிகளுக்கு கணினிமயமாக்கல் வழங்கும்.

### 44. சஹாரா குழும சங்கங்களின் முதலீட்டாளர்களுக்கு பணத்தைத் திரும்ப அளித்தல்

கூட்டுறவு அமைச்சகத்தின் மனுவின் பேரில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் 29.03.2023 தேதியிட்ட உத்தரவில், சஹாரா குழுமத்தின் (சஹாரா கிரெடிட் கூட்டுறவு லிமிடெட், சகராயன் யுனிவர்சல் பல்நோக்கு சங்கம் லிமிடெட்) 4 கூட்டுறவு சங்கங்களின் வைப்பாளர்களின் செல்லுபடியாகும் நிலுவைத் தொகையை வழங்குவதற்காக சஹாரா-செபி ரீ:ஃபண்ட் கணக்கிலிருந்து ரூ .5000 கோடியை பல மாநில கூட்டுறவு சங்கங்களின் மத்திய பதிவாளருக்கு மாற்ற உத்தரவிட்டது. ஹமாரா இந்தியா கிரெடிட் கூட்டுறவு சங்கம் லிமிடெட் மற்றும் ஸ்டார்ஸ் பல்நோக்கு கூட்டுறவு சங்கம் லிமிடெட். மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்க மத்திய பதிவாளரால் வழங்குவதற்காக நீதிபதி திரு ஆர்.சுபாஷ் ரெட்டி (ஓய்வு)

மற்றும் வழக்கறிஞர் ஸ்ரீ கௌரவ் அகர்வால் ஆகியோரின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பின் கீழ் வெளிப்படையான டிஜிட்டல் அமைப்பை (போர்ட்டல்) உருவாக்க ஸ்டாக்ஹோல்டிங் ஆவணங்கள் மேலாண்மை சேவைகள் லிமிடெட் (எஸ்.டி.எம்.எஸ்.எல்) ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒவ்வொரு குழுவிற்கும் நான்கு சிறப்புப் பணி அதிகாரிகள் (ஓ.எஸ்.டி) மத்திய பதிவாளரால் ரீஃபண்ட் செயல்முறையை மேற்பார்வையிட நியமிக்கப்பட்டுள்ளனர். போர்ட்டல் மூலம், உண்மையான வைப்புத்தொகையாளர்களின் வைப்புத்தொகை மற்றும் உரிமைகோரல்களின் ஆதாரத்தை முறையாக அடையாளம் கண்டு சமர்ப்பித்த பிறகு வெளிப்படையான முறையில் சம்பந்தப்பட்ட வங்கிக் கணக்கிற்கு பணம் செலுத்தப்படும். இந்த சங்கங்களின் முதலீட்டாளர்கள் இணையதளம் மூலம் பணத்தைத் திரும்பப் பெற விண்ணப்பிக்குமாறு மத்திய பதிவாளர் அலுவலகம் விரைவில் ஒரு செய்திக்குறிப்பை வெளியிடவுள்ளது.

## 45. மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தை கணினிமயமாக்கும் திட்டம்

அனைத்து மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களில் வெளிப்படையான காகிதமில்லா ஒழுங்குமுறைக்கான டிஜிட்டல் சூழலை உருவாக்கவும், கூட்டுறவு சங்கங்களுக்கு வணிகம் செய்வதை எளிதாக்கவும், மாநில பதிவாளர் அலுவலகங்களை கணினிமயமாக்குவதற்கான திட்டம் கூட்டுறவு அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் மென்பொருள் அந்தந்த மாநிலம் / யூனியன் பிரதேசங்களின் கூட்டுறவு சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். இந்த திட்டத்தை உருவாக்க அமைச்சகம் அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் பதிவாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது, விரைவில் இது மத்திய நிதியுதவி திட்டமாக முன்மொழியப்படும்.

***